# சட்டமுறையான கோரிக்கை விபர அட்டை

கனடாவில் கோரப்படும் அகதிகள் பாதுகாப்புக் கோரிக்கைகளை நிர்ணயிப்பதற்கான முறைமை, புதிய சகல கோரிக்கைகள் தொடர்பில் விசாணையை மேற்கொள்வதற்காக ஒழுங்குறுத்தப்பட்டுள்ள புதிய கால வரையறைகளை (30, 45, 60 நாட்கள்) உள்ளீர்க்கும் நிமித்தம் 2012 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 15 ஆம் திகதி மாற்றப்பட்டது. அந்த நேரத்தில், முன்னைய முறைமையிலிருந்து வரும் காத்திருத்தல் பட்டியல் பற்றி கனடாவின் குடிவரவு மற்றும் அகதிகள் சபை (Immigration & Refugee Board) (கு. அ. ச.) 'சட்டமுறையான கோரிக்கைகள்' என அழைக்கும் அத்தகைய சுமார் 32,000 கோரிக்கைள் காணப்பட்டன. கூடுமான வரையில் அத்தகைய கோரிக்கைகள் பட்டியல்படுத்தப்பட்டுள்ளன.

அத்தகைய கோரிக்கைகளைப் படிமுறைப்படுத்துவதில் ஏற்படும் தாமதங்களினால் வரும் கஷ்டங்களை கோரிக்கையை விடுப்பவர்களும் அவர்களின் குடும்பங்களும் பொறுத்துக்கொள்வதை சபை பாராட்டுகின்றது. இத்தகைய கஷ்டங்களின் காரணமாக, கு.அ.ச. ஏற்கெனவே எஞ்சியிருக்கின்ற அத்தகைய சகல சட்டமுறையான கோரிக்கைகளையும் 2019 ஆம் ஆண்டு மே மாதம் 01 ஆம் திகதியளவில் தொடர்ந்து படிமுறைப்படுத்துவதற்கு ஒரு சட்டமுறை சிறப்புச் செயலணியை (சிறப்புச் செயலணி) உருவாக்க வேண்டுமெனப் பிரகடனப்படுத்தியதையடுத்து, அந்த செயலணி உருவாக்கப்பட்டு, அது அதன் பணியை 2017 ஆம் ஆண்டு மே மாதம் 08 ஆம் திகதி ஆரம்பித்தது.

கு.அ.ச., தேவையானவாறு படிமுறைப்படுத்துவதற்கான உத்தேச படிவத்தில் தமது விபரங்களை இற்றைப்படுத்தி தத்தமது விசாரணை காலத்தை நிர்ணயித்துக்கொள்வதற்கு தன்னுடன் தொடர்புகொள்ளுமாறு சட்டமுறையான கோரிக்கையாளர்களுக்கு 2017 ஆம் ஆண்டு யூன் மாதம் 20 ஆம் திகதி ஒரு செய்தியை வெளியிட்டு ஒரு YouTube video ஐயும் ஏற்பாடு செய்தது.

குறித்த சிறப்புச்செயலணி 2017 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 18 ஆம் திகதி கோரிக்கை சம்பந்தமான விசாரணையை ஆரம்பித்தது. அந்த நேரத்தில், அதாவது 2017 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 30 ஆம் திகதியளவில் 4,444 சட்டமுறையான கோரிக்கைப் படிவங்கள் முடிவுசெய்யப்படுவதற்காக எஞ்சியிருந்தன. இந்த எஞ்சியிருந்த அத்தகைய கோரிக்கைப் படிவங்களில், 200 எண்ணிக்கைக்கும் அதிகமான கோரிக்கைப் படிவங்கள் தீர்மானிக்கப்பட்டுள்ளன. அத்தகைய கோரிக்கைப் படிவங்கள் கோரிக்கையை விடுத்தவர்களுக்கு அஞ்சல்செய்யப்பட்டு வருகின்றன. மேலும், தற்பொழுது 979 கோரிக்கைப் படிவங்கள் 2018 ஆம் ஆண்டு மே மாதத்திற்கும் திசம்பர் மாதத்திற்கும் இடைப்பட்டவொரு காலப்பகுதியில் விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்படவுள்ளன. மேலும், அத்தகைய கோரிக்கைப் படிவங்கள் அதிகளவில் கிடைத்தவண்ணமுள்ளன. நிறைவுபெறாது எஞ்சியிருக்கின்ற சட்டமுறையான கோரிக்கைகள் கூடுமான விரைவில் விசாரிக்கப்பட்டு, தீர்வுகள் வழங்கப்படும். **சிறப்புச்செயலணி, விசாரணைக்கான காலத்தை இதுவரை ஒதுக்கிக்கொள்ளாத சகல கோரிக்கையாளர்களிடமும் அவர்களின் அத்தகைய கோரிக்கைகளுக்கு தீர்வுகளைப் பெற்றுக் கொள்வதற்காக கூடுமான விரைவில் கு.அ.ச. உடன் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றது.**

## அகதிகள் அந்தஸ்தைக் கோருபவர்களுக்கான 'ரெடி ட்டுவர் சந்திப்புகள்'

கு.அ.ச., அகதி அந்தஸ்தைக் கோருகின்றவர்கள் அவர்களின் கோரிக்கை தொடர்பான எதிர்கால விசாரணைகளுக்கு தயாராக்கூடிய விதத்தில் பல அரச சார்பற்ற நிறுவனங்களுடன் (அ.சா.நி.) கூட்டிணைந்து ரெடி ட்டுவர் சந்திப்புகளினூடாக உதவி வருகின்றது. இந்த ரெடி ட்டுவர்கள் இலவசமாக கிடைக்கும். இந்த ரெடி ட்டுவர் சந்திப்புகள் வன்கூவர், டொரொன்டோவில் அமைந்துள்ள மொன்ட்ரியல் அலுவலகங்களில் இடம்பெறும். மேலும் விபரங்களுக்கு, உங்களுடைய பிராந்தியத்தில் ரெடி ட்டுவர் சந்திப்புகளை ஏற்பாடு செய்யும் அ.சா.நி. நிறுவனங்களுடன் தயவுசெய்து தொடர்புகொள்ளவும்.

## மேலதிக விபரங்கள்

- சட்டமுறையான கோரிக்கைகளை விடுக்கின்றவர்கள் தேவையானவாறு தமது விபரங்களை படிமுறைப்படுத்துவதற்கான உத்தேச படிவத்தில் இற்றைப்படுத்த வேண்டும்.
- சட்டமுறையான கோரிக்கைகளை விடுக்கின்றவர்கள் தனியாள் விபரப் படிவத்தை (த.வி.ப.) தொடர்ந்தும் உபயோகிக்கலாம்.
- நீங்கள் உங்களது கோரிக்கை தொடர்பில் தேசிய ஆவணமயப்படுத்தல் பொதியிலுள்ள தகவல்களை மீளாய்வு செய்ய வேண்டும்.
- நீங்கள் எப்பொழுதும் உங்களுடைய நிலமையை விளங்கப்படுத்துவதற்கான விசாரணையில் கலந்துகொண்டு உங்களின் கதைகளைக் கூறுவது அடங்கலாக கு.அ.ச. தொடர்பில் என்ன கூறவேண்டுமோ அதனை நீங்களே கட்டாயம் அறியப்படுத்த வேண்டும். கு.அ.ச. தீர்மானமெடுக்கும் அதிகாரி உங்களுக்கு அகதி அந்தஸ்து வழங்கப்பட வேண்டுமா என்பது பற்றி தீர்மானிப்பார்.
- கோரிக்கை தொடர்பான விசாரணையில் உங்களைப் பிரதிநிதிப்படுத்துவதற்கு உங்களின் சொந்தச் செலவில் பரிந்து ஆதரிக்கும் நபரை நியமித்துக்கொள்வதற்கான உரிமை உங்களுக்கு இருக்கின்றது. எனினும், பல மாணிலங்கள் சட்ட உதவி சேவைகளை வழங்குகின்றன. சட்டம் சார்ந்த தகவல்கள், ஆலோசனை, உதவி என்பவற்றை வழங்குதல், தகுதியான கோரிக்கையாளர்களைப் பிரதிநிதிப்படுத்தல் என்பன இந்த சேவையில் அடங்கும். சேவைகளும் தகைமைகளும் தொடர்பான மேலதிக விபரங்களுக்கு, தயவுசெய்து உங்களுடைய மாகாணத்திலுள்ள சட்ட உதவியை வழங்கும் நிறுவனத்துடன் தொடர்புகொள்ளவும்.
- சட்டமுறையான கோரிக்கைகளை விடுக்கின்றவர்களுக்கு மேலும் வேறு ஏதாவது சந்தேகங்கள் இருக்குமாயின், 1-833-534-2292 தொலைபேசி இலக்கத்தை அழைத்து சட்ட அலுவலருடன் தொடர்புகொண்டு விளக்கத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.